ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

දේශීය මෙහෙයුම් කටයුතු දෙපාර්තමේන්තුව
உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
Domestic Operations Department

**2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை**

2023 சனவரி 02

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

**இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

சந்தைத் தொழிற்பாடுகள் மீதான திரண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பற்றி 2021 மே 21ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்கள சுற்றறிக்கையின் 30ஆம் இலக்க வாசகத்தின் பிரகாரம் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு துணைநில் வைப்பு வசதிகள் கிடைக்கப்பெறுகின்றமை பின்வருவனவற்றுக்கு உட்பட்டதாயிருக்கும் என இத்தால் தங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

அ. குறித்த உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கான துணைநில் வைப்பு வசதி கிடைக்கப்பெறுகின்றமை கலண்டர் மாதமொன்றுக்கு ஐந்து (05) தடவைகளைக் கொண்ட உயர்ந்தபட்சம் ஒன்றிற்கு மட்டுப்படுத்தப்பட்டதாயிருக்கும்.

ஆ. குறித்த உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கான துணைநில் கடன்வழங்கல் வசதி கிடைக்கப்பெறுகின்றமை ஏதேனும் தரப்பட்ட நாளில் அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

ஆகையினால், 2023 சனவரி 16ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மறு அறிவித்தல் வரை மேற்குறித்த திருத்தங்களுடன் இணங்கியொழுகுமாறு அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் வேண்டப்படுகின்றன.

**முனைவர். ஆர். ஏ. அனில் பெரேரா**

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள**

7 වන මහල, 2 වන කුළුණ
අංක 30, ජනාධිපති මාවත
තැ.පෙ. 590, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
+94 112 477036

தளம் 7, கோபுரம் 2
இல. 30, சனாதிபதி மாவத்தை
த.பெ 590, கொழும்பு 01, இலங்கை
+94 112 346287

Level 7, Tower 2
No. 30, Janadhipathi Mawata
P.O. Box 590, Colombo 01, Sri Lanka
ddod@cbsl.lk
www.cbsl.gov.lk